நாள் **-28.01.2025**

**O.S.No.173 /2004 P.W.2**

பெயர் - திருமதி. அம்ஜத்ராணி

( சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி )

குறுக்கு விசாரணை தொடர்ச்சி **(**பிரதிவாதி தரப்பில்**) -**

நான் B Shedule (வாசாஆ.9, 10 இலக்க சொத்துக்களை பொறுத்து நான் அசல் பிராதிலும், இதற்கு முன்னால் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்திலும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா,சா.ஆ.9 மற்றும் 10 வது ஆவணங்களை பொறுத்து எனக்கு எப்போது தெரியும் எப்போது நகல் எடுத்தேன் என்றால் இவ்வழக்கினை தாக்கல் செய்யும்போதே எனக்கு தெரியும். வா,சா.ஆ.9 மற்றும் 10 வது ஆவணங்களின் நகல்களை இவ்வழக்கு தாக்கல் செய்யும்போதே நான் பெற்றுவிட்டேன். சையது இப்பராகிம் ராவூத்தருக்கு வழக்கில் கண்டுள்ள சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவர்தை பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி சையது இப்பராகிம் ராவூத்தருக்கு வழக்கில் கண்டுள்ள சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவர்தை பிராதில் கூறவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக கூறியதாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. 25.09.1970 ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஒப்பந்தத்தை பொறுத்து நான் பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 25.09.1970 ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஒப்பந்தத்தை பொறுத்து நான் பிராதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். வா,சா.ஆ.9 மற்றும் 10 வது ஆவணங்களின் நகல்களையும் 25.09.1970 ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஒப்பந்தத்தையும், இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பிறகு தான் நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றும், சொன்னால் சரியல்ல. வா,சா.ஆ.9 மற்றும் 10 வது ஆவணங்களின் நகல்களை என்னுடைய பெயரில் எடுக்கவில்லை என்று சொன்னால்

சரியல்ல. தாஜீதின் என்பவர் அனார்கலி(2ம் வாதியின்) என்பவரின் கணவர் என்று சொன்னால் சரிதான். வா,சா.ஆ.9 மற்றும் 10 வது ஆவணங்களின் நகல்களை தாஜீதின் என்பவர் தான் எடுத்து கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். வா,சா.ஆ.9 மற்றும் 10 வது ஆவணங்களின் நகல்களை 30.09.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாஜீதின் என்பவர் நில ஆர்ஜீத வழக்கில் ஒரு தரப்பினர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள நில ஆர்ஜித வழக்கில் உள்ள ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நில ஆர்ஜித வழக்கில் எனக்கு நோட்டீஸ் வரவில்லை அதில் நான் தரப்பினர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் நில ஆர்ஜித வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்து கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நில ஆர்ஜித வழக்கில் நான் இழப்பீடு எதுவும் கேட்டு சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 2 தடவை பத்திரிக்கையில் விளம்பரம் செய்தேன். அந்த பத்திரிக்கை நகல்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அதை வேண்டும்மென்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நில ஆர்ஜிதம் செய்யப்பட் நிலத்தில் எனக்கு உரிமை எதுவும் இல்லை என்பதால் தான் எனக்கு நோட்டீஸ் எதுவும் அனுப்பப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த நில ஆர்ஜித வழக்கில் இழப்பீடு எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்கள் 6 பேருக்கும் உரிமை உள்ளது. நில ஆர்ஜித வழக்கில் இழப்பீட்டு தொகையை சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நில ஆர்ஜித வழக்கில் இழப்பீடு எதுவும் கோர இயலாது என்பதால் தான் வழக்கு சொத்து விவரத்தில் அதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தாக்கல் செய்யும்போதே நில ஆர்ஜித வழக்கு குறித்த விவரங்கள் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இழப்பீட்ட தொகையை வாதிகளுக்காகவும் (எங்களுக்காகவும்) பெற்றுக்கொண்டார் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. அதில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்று பொய் என்று

சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் மற்றும் நில ஆர்ஜித வழக்கில் உள்ள இழப்பீட்டு தொகை எதுவும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒப்பம் -அம்ஜத்ராணி

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/- N. Nagalakshmi.
முதன்மை மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ).
மதுரை.